SEPC
Engineering the Future

The National Stock Exchange of India Ltd.,
Exchange Plaza, 5th Floor,
Bandra-Kurla Complex,
Mumbai-400 051
NSE Symbol - SEPC

BSE Limited
14th Floor, PJ. Towers,
Dalal Street,
Mumbai-400 001
Scrip Code: 532945

10th February, 2023

Dear Sir / Madam,

**Sub: Newspaper Advertisement — Disclosure under Regulation 30 and Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI Listing Regulations")**

Pursuant to Regulation 30 read with Schedule III and Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose the copies of newspaper advertisement published in Today's Financial Express (English) and Maalai Thamizhagam (Tamil) regarding publication of Un-Audited Consolidated Financial Results of the Company for the Quarter ended 31st December, 2022.

The above information is also available on the website of the Company - http://www.shriramepc.com/. This is for your information and records.

Yours faithfully,
For **SEPC Limited**,

T. Sriraman
Digitally signed by T. Sriraman
Date: 2023.02.10 16:20:06 +05'30'

**T. Sriraman**
**Company Secretary & Compliance officer.**

Encl.: a.a.

FRIDAY, FEBRUARY 10, 2023
FINANCIAL EXPRESS 22

SEPC
Engineering the Future

# SEPC Limited

(Formerly known as Shriram EPC Limited)
4th Floor, Bascon Futura SV, Door No. 10/1, Venkatnarayana Road, T. Nagar, Chennai - 600017. Ph.: 044-49005555;
Fax: 044-49015655; Email: tsr@shriramepc.com Website: www.shriramepc.com Corporate Identification Number: L74210TN2000PLC045167

**Extract of Consolidated Unaudited Financial Results for the Nine Months Ended 31 December 2022**

Rs. lakhs

| S. No. | PARTICULARS | Quarter ended | | | Nine Months ended | | Year ended |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2022 Unaudited | 30.09.2022 Unaudited | 31.12.2021 Unaudited | 31.12.2022 Unaudited | 31.12.2021 Unaudited | 31.03.2022 Audited |
| 1 | Total Income from Operations (Net) | **12,402.22** | 5,617.67 | 8,193.92 | **24,875.35** | 24,493.95 | **34,059.07** |
| 2 | Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | **103.37** | (9,309.66) | (6,664.34) | **(12,290.99)** | (12,835.33) | **(15,731.11)** |
| 3 | Profit/ (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | **388.86** | 4,219.98 | (6,664.34) | **1,524.14** | (12,835.33) | **(26,370.37)** |
| 4 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | **485.27** | 4,135.30 | (6,595.10) | **1,526.78** | (12,760.52) | **(26,315.75)** |
| 5 | Equity Share Capital (Face value of Rs 10/- each) | **1,32,152.90** | 97,152.90 | 97,152.90 | **1,32,152.90** | 97,152.90 | **97,152.90** |
| 6 | Earnings Per Share (of Rs. 10/- each) | | | | | | |
| | (a) Basic | **0.03** | 0.37 | (0.68) | **0.13** | (1.31) | **(2.71)** |
| | (b) Diluted | **0.03** | 0.37 | (0.68) | **0.13** | (1.31) | **(2.71)** |

**Note :** 1. The above unaudited consolidated financial results for the quarter and nine months ended December 31,2022 were reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their meetings held on February 09, 2023.

2. The above is an extract of the detailed results for the quarter and nine months ended December 31, 2022 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The detailed results for the quarter and nine months ended December 31, 2022 are available on the Stock Exchanges Website **www.bseindia.com** and **www.nseindia.com** and on the website of the Company **www.shriramepc.com**

3. The Unaudited Standalone Results for the Quarter and Nine Months ended December 31, 2022 are hereunder :

Rs. lakhs

| | Quarter ended | | | Nine Months ended | | Year ended |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2022 | 30.09.2022 | 31.12.2021 | 31.12.2022 | 31.12.2021 | 31.03.2022 |
| Total Income from Operations | 12,366.57 | 5,597.56 | 6,573.76 | 24,060.42 | 21,614.98 | 31,174.05 |
| Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 87.05 | (9,331.12) | (4,789.61) | (13,010.82) | (12,090.70) | (14,261.76) |
| Profit/ (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 372.54 | 4,198.52 | (4,789.61) | 804.31 | (12,090.70) | (24,901.02) |
| Total Comprehensive Income for the period [Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 468.95 | 4,113.84 | (4,720.37) | 806.95 | (12,015.89) | (24,846.40) |

Place : Chennai
Date : 09.02.2023

**For SEPC Limited**
**(formerly known as Shriram EPC Limited)**
**N K Suryanarayanan**
**Managing Director & CEO**

# காஞ்சிபுரத்தில் அண்ணா நினைவு இல்லத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை

காஞ்சிபுரம், பிப். 10-

தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின், அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவு இல்லத் திற்கு வருகை புரிந்தார். அவரை மாவட்ட ஆட்சியர் மா.ஆர்த்தி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள அவரது சிலைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு இருந்த வருகை பதிவேட்டிலும் தனது வருகையை பதிவு செய்தார்.



அமைச்சருடன் தமிழக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங் கள் துறை அமைச்சர் அன்பரசன், எம்.பி., க. செல்வம், எம்.எல்.ஏ.,க் கள் கா.சுந்தர், எழிலரசன், மாவட்ட கண்காணிப்பாளர் சுதாகர், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை மனோகரன், துணைத் தலைவர் நித்யா சுகுமார் காஞ்சிபுரம் நகர் செயலர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலரும் உடன் இருந்தனர்.

அண்ணா நினைவு இல்லத்தில் காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ் பேனா சிலை ஒன்றை பரிச ாக வழங்கினார். காஞ்சிபுரம் எம்.எல்.ஏ., எழிலரசன் வெள்ளி வால் வழங்கினார். இந்த நிகழ்வில் ஒன்றிய குழு தலைவர்கள் மலர் கொடி பி.எம்.குமார், வாலாஜாபாத் ஒன்றிய குழு தலைவர் தேவேந்திரன், ஒன்றிய செயலர் பி.எம்.குமார், படுநெல்லி பாபு, குமணன் மற்றும் காஞ்சிபுரம் கோட்டாட்சியர் கனி மொழி, பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் சிவ சண்முகம், பயிற்சி ஆட்சியர் அர்பித் ஜெயின் ஆகியோர் உட்பட பலர் உடன் இருந்தனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள உள்விளையாட்டு அரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டி துவக்க நாளை முன்னிட்டு சிலம்பாட்ட போட்டியை ஆட்சியர் பழனி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் வேல்முருகன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளனர்.

## பிரிவினைவாதம்; அசோக் கண்டனம்



ஊத்தங்கரை, பிப். 10-

இந்து மக்கள் கட்சியின் வள்ளி மலை ஆதீன தெய்வீக பேரவையின் மாநில தலைவராக, டாக்டர் அசோக் தேர்வு செய் யப்பட்டார். அவரை இந்து மக்கள் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங் கரையில் செய் தியாளர்களை சந்தித்த அவர், ''இந்து மக் களை தமிழகத்தை ஆளும் மாநில அரசு தொடர்ந்து இழிவு படுத்தி வருகிறது. எங்கெல்லாம் இந்து மக்களை இழிவு படுத்துகிறார்களோ அங்கு உடனடியாக இந்து மக்கள் கட்சியின் தெய்வீக பேர வையும் வள்ளிமலை ஆதீனத்தின் நிர்வாகிகளும் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வோம். இந்து மக் களும் தமிழர்களும் ஒரே இனம். இதனை வேறுபடுத்தி காட்டு வது பிரிவினைவாதம். இந்த அடக்குமுறையை வள்ளிமலை ஆதீனம் கடுமையாக கண் டிக்கிறது,'' என்றார்.

# சாலிகிராமம் வேர்ஹவுஸ் மெட்ரோ ரயில் நிலையமா? தே.வ.இ.பேரவை தலைவர் விருகை பட்டாபி கண்டனம்

சென்னை, பிப். 10-

சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் ரூ.63,246 கோடி செலவில் 118.9 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங் களில் செயல்படுத்தப்படுகின் றன. இந்த திட்டப் பணிகளை வரும் 2026ம் ஆண்டுக்குள் முடி க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் முதல் திட்டம் 54.1 கி.மீ., தூரத் தில் விம்கோ நகர் முதல் சென்னை விமான நிலையம் வரையிலும், சென்ட்ரல் முதல் பரங்கிலை வரையிலும் என இரண்டு வழித்தடங்களில் முழு மையாக செயல்பாட்டில் உள் ளது. இந்த நிலையில், 3வது வழித்தடம் மாதவரம் முதல் சிறுசேரி வரையில் 45.8 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 4வது வழித்தடம் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரை 26.1 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 5வது வழித்தடம் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை 47 கிலோ மீட்டர் நீளத்திற்கும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரை நடைபெறும் மெட்ரோ ரயில் பணியில், விருகம்பாக்கம் ரயில் நிலையத்திற்கு பதில், சா லிகிராமம் வேர்ஹவுஸ் என பெயரிடப்படுவதற்கு, தேசிய வரலாற்று இலக்கிய பேரவை



தலைவர் விருகை பட்டாபி கண் டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக் கையில், 'மெட்ரோ ரயிலின் 2ம் கட்ட திட்டம், மெரினா கலங் கரை விளக்கம் முதல், திரும யிலை, தி.நகர், கோடம்பாக்கம், பவர்ஹவுஸ், வடபழனி, விரு கம்பாக்கம், ஆற்காடு சாலை வழியாக, போரூர், பூந்தமல்லி வரை நடைபெற்று வருகிறது. இதில், ஆற்காடு சாலையில் சா லிகிராமம் நிறுத்தத்திற்கும் ஆழ் வார்திருநகருக்கும் இடையே உள்ள, பாரம்பரிய ஊராக விளங் கும் விருகம்பாக்கம் என்பதை விடுத்து, சாலிகிராமம் வேர்ஹ வுஸ் என, பெயரிடப்பட் டுள்ளது. இது, பழமையான விருகம்பாக்கம் என்ற ஊரின் பெயரை மறைப்பதற்கும் சிதைப்பதற்கும் ஒப்பானது.

கடந்த, 1967ல் தேர்தலுக்கு முன், தி.மு.க., நடத்திய திருப்பு முனை மாநாடு, விருகம்பாக்கத் தில் நடந்தது குறிப்பிடத்தக்கது. விருகம்பாக்கம் சட்டசபை தொ குதியாகவும் உள்ளது. விருகம் பாக்கம், சார்பதிவகம் இயங்கி வருகிறது. இப்படி, காவல் நிலையம், அஞ்சல் நிலையம், மின்வாரியம் என, அரசு அலுவ லகங்கள், விருகம்பாக்கம் பெய ரில் இயங்கி வரும் நிலையில், சாலிகிராமம் வேர்ஹவுஸ் என, பெயரிடப்பட்டுள்ளது. இதை மாற்றி, விருகம்பாக்கம் வேர்ஹ வுஸ் ரயில் நிலையம் என அறி விக்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தெரி வித்துள்ளார்.

# ராமநாதபுரத்தில் முகவை சங்கமம் 'புத்தக திருவிழா'

ராமநாதபுரம், பிப். 10-

ராமநாதபுரம் ராஜா மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் சங்கம் இணை ந்து நடத்திய 5வது புத்தக திருவிழா துவக்க விழா மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் தலை மையில் நடந்தது. ராமநாதபுரம் எம்.எல்.ஏ., காதர்பாட்சா முத்து ராமலிங்கம், பரமக்குடி எம்.எல்.ஏ., முருகேசன், ராமநாதபுரம் ராஜா நாகேந்திர சேதுபதி ஆகியோர் முன் னிலை வகித்தனர். கலை பண்பாட்டுத் துறை மாவட்ட சவகர் சிறுவர் மன்றம் சார் பில் அதன் திட்ட அலுவலர் லோகசுப்ர மணியன் தலைமையிலான மாணவ, மாணவியர் பங்கேற்ற சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மரக்கால் ஆட்டம், தப்பாட் டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சி




கள் நடத்தி வரவேற்றனர். இதில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி யை திறந்து வைத்து ஆட்சியர், மற்றும் எம்.எ.ல்ஏ., பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் மதுரை சரக சிறைத்துறை டி.ஐ.ஜி., பழனி, மாவட்ட வருவாய் அலுவலர் காமாட்சி கணேசன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கே.ஜே. பிர வீன் குமார், பரமக்குடி சார் ஆட்சி யர் அப்தாப் ரசூல், உதவி ஆட்சியர் (பயிற்சி) நாராயண சர்மா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியா ளர் (பொது) சேக் மன்சூர், நகர்மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம், ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் கோபு, நகர்மன்ற துணைத் தலைவர் பிரவின் தங்கம், கலை இலக்கிய ஆர்வலர் சங்கத்தின் தலைவர் டாக்டர் சின்னத்துரை அப்துல்லா, அறம் விழுதுகள் அறக்கட் டளை தலைவர் டாக்டர் முகமது சலா வுதீன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் ஏராள மானோர் கலந்து கொண்டனர். இந்த புத்தக கண்காட்சி வரும் 19ம் தேதி வரை நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'புதுமைப் பெண்' திட்டம்; கள்ளக்குறிச்சியில் மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் விழா

கள்ளக்குறிச்சி, பிப். 10-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மூவலூர் ராமாமிர்தம், அம்மையார் நினைவு புதுமைப்பெண் திட்டத் தின் கீழ் இரண்டாம் கட்டமாக உயர் கல்வி பயிலும் மாணவிய ருக்கு ரூ.1,000 வழங்கும் திட்ட துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற் றது. இதில் 793 கல்லூரி மாணவிய ருக்கு ரூ.1,000 வழங்கப்பட்டது. அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வி படித்து வரும் கல்லூரி மாணவியருக்கு மூவலூர் ராமா மிர்தம் அம்மையார் நினைவு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூபாய் 1,000 வழங்கும் இரண்டாம் கட்ட திட்ட துவக்க விழா நிகழ்ச்சி கள்ளக்குறிச்சியில்




தனியார் பள்ளி கூட்ட அரங்கில் நடைபெற்றது. கள்ளக்குறிச்சி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் ஷர்வன்குமார், தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் தீபிகா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சரஸ்வதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ் வரி பெருமாள், ஒன்றிய பெருந் தலைவர் அலமேலு ஆறுமுகம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முனீஸ்வரன், மற்றும் திருநாவலூர் சேர்மன் சாந்தி ரிஷிவந்தியம் சேர்மன் உட்பட நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவியர் கலந்து கொண்டனர்.



சென்னை அடுத்த பூந்தமல்லி மலையம்பாக்கம் ஸ்ரீனிவாச நகரில் உள்ள கோட்டை மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் அன்னதானம் வழங்கப்பட்டன. இதில் கோவில் நிர்வாகிகள் உத்திரவேல், சேஷகிரி ராஜேந்திரன், நடராஜன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நூலகத்திற்கு சுற்றுச்சுவர் பொதுமக்கள் கோரிக்கை



திருவாரூர், பிப். 10-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் கொறுக்கை ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், நூலகம் இயங்கி வருகிறது. மிகவும் பழுதடைந்து காணப்பட்ட இந்த நூலகம் சமீபத்தில் சீரமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த நிலை யில், நூலகத்தை சுற்றிலும், 'குடி'மகன்கள் மதுபாட்டில் களையும், பிளாஸ்டிக் பொருட்களையும் வீசி செல்கின்றனர். இதனால், அந்த பகுதியில் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் சூழல் உருவாகி உள்ளது. மேலும், பாட்டில்கள் உடைக்கப்படுவ தால், நூலகத்திற்கு செல்லும் பொதுமக்கள் மிகுந்த சிரமத் திற்கு ஆளாகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நூலக சுற்றுச்சுவர் கட்டடத்திர வேண்டும் என, பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 'அல்வா' விற்பனை செய்து நூதன போராட்டம்

திண்டிவனம், பிப். 10-

திண்டிவனம் அடுத்த ஒலக்கூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமீப கால மாக மக்கள் பிரதிநிதி களுக்கு மக்கள் பணியாற்ற முறையாக வாய்ப்பு வழங்கப் படுவதில்லை என்று புகார் கள் எழுந்து வந்தது.




இந்த நிலையில் திண்டிவனம் அடுத்த ஒலக்கூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் எதிரில் நொளம்பூர் ஒன்றிய குழு உறுப்பினர் எழிலரசன் மற்றும் கீழ்கூடலூர் ஒன்றிய குழு உறுப்பினர் பூங் கொடி ஆகியோர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் முன்பு பொதுமக்களுக்கு அல்வா விற்பனை செய்து நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது ,அங்கிருந்த பொதுமக்கள் குறைவான விலைக்கு அல்வா கிடைத்த தால் ஆர் வமுடன் கிலோ கணக்கில் வாங்கி சென்ற னர். போரா ட்டத்திற்க்காக ஒன்றிய குழு உறுப்பினர் களால் எடுத்துவரப்பட்ட அல்வா சிறிது நேரத்தில் காலியானது. பின்பு ஒன்றிய குழு உறுப்பினர்கள் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர். ஒலக்கூர் வட்டார வளர்ச்சி அலுவல கத்தில் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் பணியாற்ற வாய்ப்புக் கொடுக் காததை நினைவு படுத்தும் வகையில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் அல்வா விற்பனையில் ஈடுபட்டு போராட்டத்தில் ஈடுபட் டதால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## யோக சக்தி சாய்பாபா கோவில் 3ம் ஆண்டு வருஷாபிஷேக விழா

நெல்லை, பிப். 10-

நெல்லை தச்சநல்லூர் நல்மேய்பர் நகர் சீரடி ஸ்ரீயோக சக்தி சாய்பாபா கோவில், 3ம் ஆண்டு வருஷாபிஷே விழா நடைபெற்றது. கடந்த 7ம் தேதி மாலை 6:00 மணிக்கு, நலச் சங்க குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 8ம் தேதி மாலை 6:00 மணிக்கு சிறப்பு பாடல் நகைச்சுவை பட்டி மன்றம் நடைபெற்றது. நேற்று (9ம் தேதி) காலை 6.45 மணிக்கு ஆரத்தி, 9:00 மணி மகா கணபதி ஹோமம், சிறப்பு ஹோமங்கள் நடை பெற்றன. காலை 10.45 மணிக்கு மேல் பாபா மூர்த்தி அபிஷேகம், பரிவார மூர்த் திகள் அபிஷேகம், அலங்காரம் நடைபெற் றது. பகல் 12:00 மணிக்கு பகல் ஆரத்தி, 12.30 மணிக்கு அன்னதானம் நடை பெற்றது. மாலை 6.30 மணிக்கு மாலை ஆரத்தி, 7:00 மணிக்கு அன்னதானம் நடைபெற் றது. இரவு 8:00 மணிக்கு இரவு ஆரத்தி எடுக்கப்



பட்டது. விழாவில் சிறப்பு விருந் தினராக மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் தச்சை என்.கணேசராஜா, நெல்லை எம்.எல்.ஏ., நயினார் நாகேந்திரன், நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். அனைவருக் கும் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீசாய் அருட்பணியில் விழா குழுவினர், விழா ஒருங்கிணைப்பாளர் வி.பிலிப்ஸ் வெர்சலின் செய்திருந்தனர்.

SEPC
Engineering the Future
எஸ்இபிசி லிமிடெட்
(முன்னாள் ஸ்ரீராம் இபிசி லிமிடெட்)
4வது தளம், பாஸ்கன் ஃப்யூசுரா SV, கதவு எண்.10/1, வெங்கடநாராயணா ரோடு, தி. நகர், சென்னை 600 017.
தொ.பே.: 044-49005555; ஃபேக்ஸ் : 044-49015655 ஈ–மெயில் : tsr@shriramepc.com
இணையதளம் : www.shriramepc.com Corporate Identification Number L74210TN2000PLC045167

டிசம்பர் 31, 2022ல் முடிந்த ஒன்பது மாதங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கையின் சுருக்கம்

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | விபரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2022 தணிக்கை செய்யப்–படாதது | 30.09.2022 தணிக்கை செய்யப்–படாதது | 31.12.2021 தணிக்கை செய்யப்–படாதது | 31.12.2022 தணிக்கை செய்யப்–படாதது | 31.12.2021 தணிக்கை செய்யப்–படாதது | 31.03.2022 தணிக்கை செய்யப்–பட்டது |
| 1 | செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | **12,402.22** | 5,617.67 | 8,193.92 | **24,875.35** | 24,493.95 | **34,059.07** |
| 2 | இந்தக் காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரி, தனிச்சிறப்புள்ள மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு முன்) | **103.37** | (9,309.66) | (6,664.34) | **(12,290.99)** | (12,835.33) | **(15,731.11)** |
| 3 | இந்தக் காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரி, தனிச்சிறப்புள்ள மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்) | **388.86** | 4,219.98 | (6,664.34) | **1,524.14** | (12,835.33) | **(26,370.37)** |
| 4 | இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் [இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது] | **485.27** | 4,135.30 | (6,595.10) | **1,526.78** | (12,760.52) | **(26,315.75)** |
| 5 | சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ரூ.10/– ஒவ்வொன்றும்) | **1,32,152.90** | 97,152.90 | 97,152.90 | **1,32,152.90** | 97,152.90 | **97,152.90** |
| 6 | ஒரு பங்கு ஈட்டிய வருவாய் (ஒவ்வொன்றும் ரூ.10/–) | | | | | | |
| | (அ) அடிப்படை | **0.03** | 0.37 | (0.68) | **0.13** | (1.31) | **(2.71)** |
| | (ஆ) மாற்றியமைக்கப்பட்ட நிலையில் | **0.03** | 0.37 | (0.68) | **0.13** | (1.31) | **(2.71)** |

**குறிப்பு :** 1. மேற்கண்ட, தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள், பிப்ரவரி 09, 2023 அன்று நடந்த அவரவர்களது கூட்டத்தில் தணிக்கை குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, இயக்குநர் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
2. பட்டியல் மற்றும் வெளியீடு குறித்தத் தேவைகள் தொடர்பாக, செபி (SEBI) அமைப்பு 2015ம் ஆண்டு வழங்கியுள்ள வழிகாட்டுதலில் உள்ள விதிமுறை எண் 33ன் படி, டிசம்பர் 31, 2022 அன்று முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான, பங்குச் சந்தையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முழுவடிவிலான, தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது. டிசம்பர் 31, 2022 அன்று முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான, முழுவடிவிலான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (**www.nseindia.com** மற்றும் **www.bseindia.com**) என்ற பங்கு வர்த்தக இணையதளங்களிலும் மற்றும் **www.shriramepc.com** என்ற நிறுவன இணையதளத்திலும் காணலாம்.
3. டிசம்பர் 31, 2022 அன்று முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனித்தன்மையான முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன :

(ரூ. இலட்சத்தில்)

| | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2022 | 30.09.2022 | 31.12.2021 | 31.12.2022 | 31.12.2021 | 31.03.2022 |
| செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம் | 12,366.57 | 5,597.56 | 6,573.76 | 24,060.42 | 21,614.98 | 31,174.05 |
| இந்தக் காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரி, தனிச்சிறப்புள்ள மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு முன்) | 87.05 | (9,331.12) | (4,789.61) | (13,010.82) | (12,090.70) | (14,261.76) |
| இந்தக் காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரி, தனிச்சிறப்புள்ள மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்) | 372.54 | 4,198.52 | (4,789.61) | 804.31 | (12,090.70) | (24,901.02) |
| இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் [இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது] | 468.95 | 4,113.84 | (4,720.37) | 806.95 | (12,015.89) | (24,846.40) |

எஸ்இபிசி லிமிடெட்டிற்காக
(முன்னாள் ஸ்ரீராம் இபிசி லிமிடெட்)
என் கே சூரியநாராயணன்
நிர்வாக இயக்குநர் & தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 09.02.2023